REGD No. M 4842

திராவிடநாடு

விலை அணா 2.
சிலோன் 15 சதம்

லர் 10. | 7—10—51 | இதழ் 15.

கோழைத்தனம்

ந்து சட்ட திருத்த மசோ வ டில்லி சர்க்கார் கைவிட்டு டார்கள்.

எப்படியும் நிறைவேற்று ன்!'' என்று சங்கநாதம் செய்த டித நேருவே, "நல்ல காலம் ம் வரையில் இம்மசோதாவை திவைக்க விரும்புகிறேன்'' று அறிவித்திருக்கிறார்.

எப்படியும் நிறைவேற்றுவேன், த எதிர்ப்புக்கும் கலங்கமாட் ன். இம்மசோதா நிறைவேற்றப் ாவிடில் என்மீது சட்டசபை ப்பினர்களுக்கு நம்பிக்கை லையென்றே பொருள், இம்ம ாதா சட்டமாகாவிடில் நான் நிச் ம் ராஜினமா செய்வேன்! மந்திரி வியை விட்டு ராஜினமா செய் ன்!'' என்று எக்காளம், எழுப் ர், அவர்.)

1949-டிசம்பரில், பார்லிமெண் ல், இவ்விதம் அறிவித்தார், அவர்.

ஆனல் 1951 செப்டம்பரில் சோதா கைவிடப்படுகிறது— ன்று அவரே அறிவித்துவிட்டார்.

இந்து சட்ட திருத்த மசோதா, றைவேறவில்லை! கைவிடப்பட் து!!

இந்தியா சுயராஜ்யம் பெறுவ ற்கு முன்பிருந்தே, இம்மசோதா ல்லி சட்டசபையில் இருந்து வரு து. பாகிஸ்தான் ஏற்படாத அப் போதே, மத்ய சட்டசபையில், இதன் நகல் வைக்கப்பட்டது. கிட்டத் தட்ட ஆறு ஆண்டுகள்! இருந்தும், அம்மசோதா நிறைவேற வில்லை—கைவிடப்பட்டது!!

[அரங்கண்ணல்]

வீராவேசம் பேசிய நேருவே, இத்தகவலை பார்லிமெண்டில், பகர்ந்தாராம். அறிவிப்பைக் கேட்டதும் திடுக்கிட்டோம். கைவிடப்பட்டதற்கான காரணத்தைக் கண்டதும் திகைப்பு வளர்ந்தது.

நேரமில்லையாம், கவனிக்க!
கவனிக்க நேரமில்லையாம்!
என்வேகைவிடப்படுகிறதாம்!!

பண்டிதர், தந்திருக்கிறார், மசோதா ஒத்திவைக்கப்படுவதற்குக் காரணம், தற்போதைய பார்லிமெண்டுக்கு இம்மசோதாவைக் கவனிக்கப் போதிய அவகாசம் இல்லையென்பதாக.

இம்மசோதா ஆறு ஆண்டுகளுக்கு முன்னரே தயார் செய்யப்பட்டது என்பதுமட்டுமல்ல.

1939-லேயே, முதன் முதலில் காங்கிரஸ் மந்திரிசபை மாகாணங்களிலெல்லாம் அமைக்கப்பட்டதே; அப்போதே மத்ய சட்டசபையில் இத்திருத்த மசோதா கொண்டுவர முயற்சிக்கப்பட்டது — காங்கிரஸ் காரரால்.

அப்போது பிரிட்டிஷ் சர்க்காரும் இம்மசோதாவை நிறைவேற்று வதில் ஆர்வம் காட்டினர்.

ஆனல் முயற்சி அரும்பாகவில்லை! அத்துடன் முடிந்தது.

பிறகு, அப்போது கல்கத்தா உயர்நீதி மன்ற நீதிபதியாயிருந்த—இப்போது பிரபலமானவர்—சர். பி. என். ராவ் வசம், இது பற்றிய நகல் தயாரிக்கவும், பிரச்னைகளை ஆலோசிக்கவுமான பொறுப்புகள் விடப்பட்டன.

இம்மசோதா பற்றிய எண்ணம் மலர்ந்து சுமார் பன்னிரண்டு ஆண்டுகளாகிவிட்டன.

பன்னிரண்டு ஆண்டுகள்! எனினும் மசோதா சட்டமாகவில்லை!

காரணம்? நேரமில்லையாம்!—நேரு சொல்கிறார்.

பிரிவினைக்கு முன்னிருந்த மத்ய சட்டசபையில் கொண்டுவரப்பட்ட இம் மசோதா கிட்டத் தட்ட நாலரை ஆண்டுகளாக, டில்லி சட்டசபையில் வட்டமிட்டு வருகிறது.

இந்த மசோதா தயாரிக்கப்பட்டதும், டில்லி மந்திரிசபையினர் கூடினர். அவர்கள் பரிசீலனைக்கு வந்தது. 'ஆகா! என்ன ஆட்சேபம். இந்து மதத்தைத் திருத்தவேண்டியது தானே' என்றனர், எல்லோரும்.

ஆறுமுகநேரி அக்கிரமம்

ஆறுமுகநேரியில், 144 தடைவிதிக்கப்பட்டதும், நம் தோழ தடையை மீறி சிறை சென்றதும், பேச்சுரிமையில் நம்பிக்கைகொ டோர் நெஞ்சு குளிர்வித்த நிகழ்ச்சிகள்.

தடையை மீறியவர்கள். எம். எஸ். சிவசாமி, எம். இரத்தி சாது, தியாகராஜன், மணிமொழியன், சண்முகசுந்தரம், தனசே திலகராசன், சோமு ஆகிய ஒன்பது இயக்க வீரர்கள்.

9—9—51ல் கைது செய்து 24—9—51வரை தோழர்களை யில் பூட்டியிருந்தனர். பிறகு வழக்கு பதிவு செய்துள்ளனர்.

29—9—51ல் வழக்கு தொடங்கியிருக்கிறார்கள்.

ஆள்வந்தார் அணையும் ஜோதியின் கடைசி வெளிச்சம்போ காட்சி தருகிறார்கள்! ஆனால் அதற்கு மக்கள் அஞ்சவில்லையென்ற துக் காட்டியுள்ளார்கள் நம் கழகக் காளைகள்.

ஆளவந்தாரின் அநியாய அடக்குமுறைகளை எதிர்த்திட ஒருப எப்பொழுதும் தயாராக இருக்கிறது என்பதைக் காட்டுகிறது, ஆறு நேரி. அங்கு அக்கிரமவெறிக் கூத்தாடிய ஆளவந்தார் இந்த உண்மை உணரட்டும்! அவர்களாகவே உணராவிட்டால், மக்களே உணர்த் கும் நாள் நெருங்கிவிடும்!

பிறகு, காங்கிரஸ் சட்டசபைக் கட்சியின் அபிப்பிராயம் கோரப் பட்டது—அங்கும் மறுப்பில்லை.

அதன்பிறகே, அது பார்லி மெண்டு முன்வந்தது.

அங்கும் முதல் முறை படிக்கப் பட்டு செலக்ட் கமிட்டி ஆலோ சனைக்கு விடப்பட்டது.

அந்த முக்கிய கட்டமும் தாண்டி சட்டமாகும் நேரத்தில்—மரணக் குழியில் வீழ்ந்திருக்கிறது.

முயற்சி துவங்கி 12-ஆண்டுகள்.

நகலாகப் பிறந்து 4½-ஆண்டுகள்.

இருந்தும், நேரமில்லையாம்! கைவிடப்பட்டதாம்!!

நேரு, இம்மசோதாவைக் கைவிட்டது பற்றித் தெரிவிக்கும் காரணத்தைக் கேட்கும் போது வேடிக்கை மட்டுமல்ல, நகைச்சுவையாகவும், இருக்கிறது.

* * *

சந்தானம்: வைதீகம் என்றும் நிலையானதல்ல. மாறிக்கொண்டுதான் இருக்கிறது. உதாரணமாக எங்கும் இப்போது மீன் சாப்பிடுகிறார்கள்......

காமத்: மீன் சாப்பிடாமலிருப்பது வைதீகமா?

சந்தானம்: எங்கள் தெற்குப் பகுதிகளில் அப்படித்தான்!

பண்டித மெய்த்ரா: ஓகோ! எங்கள் பக்கத்தில் இட்லி சாப்பிடுவது வைதீக முறைக்கு விரோதம்!

சபைத் தலைவர்: இட்லி, மீன் விஷயங்களைவிட்டு மசோதாவின் விவாகரத்து, சுவீகார பிரச்னைகளுக்கு வாருங்களேன்!

கித்வா: ஐயோ! ஐயோ! மீன் சந்தையாகவாவது ஆகாமலிருக்கட்டுமே சபை!

*

காட்கில்: சனாதனம் என்பது பழக்க வழக்கங்களில் தான். உதாரணமாக பூணூல்...

சௌத்ரி: பூணூலைப்பற்றிப் பேசுகிறீர்களே. உங்கள் மார்பில் அது புரளாமலா இருக்கிறது?

காட்கில்: விட்டுவிட்டேன் - இதோ பாருங்கள்...

சபைத் தலைவர்: சட்டையைக் கழற்றவேண்டாம்.

காட்கில்: நான் எப்போதும் பூணூல் விசேஷ விரத தினங்களில்மட்டுமே, நான் பூணூல்அணிவேன். வேத முறைப்படி உண்மையான பிராம்மணனாக நான் எப்போது நடந்துகொள்ள வேண்டுமென, என் ஆன்மா கூறுமோ, அப்போது அதுபோல இருப்பேன். சமீபத்தில் சோமநாதபுர ஆலயக் கும்பாபிஷேகம் நடைபெற்றதே—அன்று, அரை மணி நேரம் பூணூலோடு இருந்தேன்......

*

சுரங்க மந்திரி: பலதார மணம் கூடாதுதான். ஆனால், அதைக் காரியத்தில் நிறைவேற்ற முடியுமோ என்கிறார் முகர்ஜி. தேர்தல் நேரத்தில் 'ராமராஜ்யம்' எனப் பேசுவதும், மற்ற நேரத்தில் அதை உதறித் தள்ளுவதும் போன்றதாகும் அவர் கூற்று...

சௌத்ரி: ராமராஜ்யம் என்றீர்களே ராமன் தந்தை தசரதர் யோக்யரா?

மந்திரி: மூன்று அம்மாக்கள் இருப்பதின் சங்கடத்தை ராமன் அனுபவித்தான். அதனால்தான் தன் குழந்தைகளாவது தன்னைப் போல் கஷ்டப்படாமலிருக்கட்டுமென ஏக பத்னியோடு இருந்

மாளவியா: ராமராஜ்யத்தில் ரத்து உண்டா?

* * *

இவை, நம் கற்பனைகள் எந்தப் பார்லிமெண்டுக்கு மில்லையென்று நேரு பகன் அந்த இடத்தில் நடைபெற் தங்கள்! இதுபோல, ஒவ் நாளும் கேலிக்கும் கிண்ட மாக அவர்கள் ஒதுக்கிய செலவழித்த காலம்!! மிக மி கம்!!!

இருந்தும், நேரமில்லாம விட்டது, என்று காரணம் றார்.

"இல்லாவிட்டால் எ எடுத்த காரியத்தை முடி வோம். சில நாட்கள் பார்லி டைத் தொடர்ந்து நடத்து என்று தென்னாட்டு உறுப்பின சிலர் செப்பினராம்.

"இல்லை. எப்படி முடி என்றே பதில் கிடைத்ததாம்

நேரமில்லை!—இந்த பதில் போது தெரிவிக்கப்படுகிறது

பலப் பல ஆண்டுகள், ப யிருக்கின்றன. பார்லிமெ ஆரம்ப முதல் அந்திய கால இம்மசோதாவை நிறை

பவில்லை!—இதைக் கூற வெட்
அல்லது துக்கமோ, மறைத்
பசுகிறார் நேரு.

* *

மதச்சீர்திருத்த மசோதா,
ட்சிகரமான புதுத் திட்டம்
புரையோடிப் போன புண்
ஆச்சவேலைகள் நடத்துவது
றது. மனுவும் யாக்ஞவல்
செய்துவைத்த ஏற்பாடுகளில்,
ருளவற்றை, தற்போதைய
க்கேற்றவாறு மாற்றிஅமைப்
இந்த மசோதாவின் முக்கிய
ம், இந்துப் பெண்களுக்கான
களை ஓரளவு அளிப்பதுதான்.

ன் முக்கிய அம்சங்கள்:

தார மணம் கூடாது.

மண ரத்துரிமை உண்டு.

ண்களுக்கும் சொத்துரிமை

வைகளைத்தான் கச்சை கட்டி
ந்திருக்கின்றனர். சாதாரணச்
ருத்தங்கள் இவை. இவைகளை
வேற்ற முடியவில்லை ஒருபலம்
ந்திய ஆட்சியினரால்.

மசோதாவை ஆதரித்தோர்,
வேற்றப்படவேண்டுமென்ப
அக்கரை காட்டினேர் அல்ப
மானவரல்ல. அவர்கள்விவா
ன்போது, எதையெதை வெளி
மறைத்துப் பேசுவார்களோ
வெல்லாம், பார்லிமெண்டிலே
டினர்.

தானம்—ரயில் மந்திரி—அவர்
னர்:

ஒவும் யாக்ஞவல்யரும்செய்து
வத்ததை பிரிட்டிஷ் நீதிபதி
ர் தங்கள் விருப்பம் போல்
ற்றினரே, யார்கேட்டனர்?
ரிய பழக்க வழக்கங்களிலுள்ள
ரியதொரு பிழையை நீக்கு
க, இம் முயற்சி''

பாளனி—இப்போது பிரஜா
அவர் கேலியாக்க் கூறினர்:

இந்து மதத்துக்கு எப்படி
த்துவரும்! அதில் தான் திரு
களும் காசிகளும் கள்ளச்
தக்காரர்களும் சுயநலமி
சொத்தாசை கொண்டோ
ரம்பி வழிகின்றனரே!''
த்திரத்தோடு ஒருமுறை பேசி
ர்;

''இந்து மதம் என வெறியோடு பேசுகிறார்களே அவர்களைக்கேட்கிறேன். அதுதானே நம் தேசப்பிதாவை சுட்டுச் கொன்றது? கொலைகாரனும் கள்ளனும்தானே இந்துமதத்தால் கொட்டமடிக்கிறான்?''

பண்டிதநேரு, இந்துமதக் கொடுமைபற்றி எத்தனையோ முறை பேசினர். மசோதாவை எதிர்ப்பவர்களை பார்த்துக் கேட்டார்.

''நமது சமுதாயம் முன்னேற வேண்டாமா? அரசியலிலே நாம் விடுதலை பெற்றிருக்கலாம். ஆனல் சமுதாய விடுதலையும் பொருளாதாரவிடுதலையும் பெற வேண்டாமோ? நமது ஜன்ம தேசம் முன்னேற எத்தனை பாதைகளில் செல்லவேண்டும். புதுப்பாதை கண்டு அதில் முதலடி வைப்பதற்குள் இப்படி கதறுகிறீர்களே! இம்மசோதாவின்மூலம் நமது சமுதாயத்தை அரித்துக் குலைக்கும் அடிப்படையையே அல்லவா மாற்ற வழிபெறலாம் என நம்பினேன்''

டாக்டர் அம்பேத்கார், இந்துமதம் இழைத்த கொடுமைகளையெல்லாம் எடுத்துக்கூறினர். ஒருமுறை,

''இந்துச் சட்டம் பிராம்மணனையும் — சூத்ரனையும் படைத்தது. இருவருக்குமிடையே பெருத்த பேதத்தை உண்டாக்கிற்று. பெண்களை சூத்ரர்களாக்கி ஆண்கூட்டத்தை பிராமணர்களாக்கிற்று''

என்று ஆவேசத்தோடு கூறினர்.

ஆதாவு தரப்பேசியோர் ஒருவர் இருவரல்ல. அவர்கள் காட்டிய ஆதாரங்களும் எளிதில் வளையக் கூடியவை அல்ல. பார்லிமெண்டு அங்கத்தினரில் மிகப்பலர் ஆதரித்தனர்.

இரண்டாவது முறையாக இம் மசோதா பார்லிமெண்டுக்கு வந்த போது, இம்மசோதா விவாதத்தில் கலந்துகொண்ட 33 உறுப்பினர்களில் 23 பேர் ஆதரித்தனர். மூவர் நடுநிலைமை வகித்தனர். எழுவரே எதிர்த்தனர்!

அகில இந்திய மாதர் மாநாடு
பெண்களின் தேசிய கவுன்சில்
டெல்லி மகிளசபா
காங்கிரஸ் சேவகி தளம்
முற்போக்குக் கட்சிகள்
காங்கிரஸ் தலைவர்கள்
டில்லி மந்திரிகள்
பல மாகாண மந்திரிகள்
வட்டாரக் காங்கிரஸ் சபைகள்
பலப்பல மாநாடுகள்
ஐக்கியநாட்டுச் சபையினர்
பெண்ணுரிமை சாசனம்

போன்றவை, இம்மசோதா எப்படியாவது கொண்டுவரப்படவேண்டுமென்பதில் சிரத்தை காட்டின. நாம், நமது மாநாடுகள்மூலமும், நமது தி. மு. க. பெண்கள் மாநாடு மூலமும் மேற்படி மசோதாவின் அவசியம்பற்றி வலியுறுத்தினோம். நமது கிளைக்கழகங்கள் சட்டமந்திரி அம்பேத்காரை, ஊக்குவித்து தந்திச் செய்திகள் அனுப்பின.

டெல்லிபோன்ற இடங்களிலே உள்ள காங்கிரஸ் சபைகள், ''பிற்போக்குக் கும்பலின் கூச்சலுக்கு சர்க்கார் பணிந்துவிடக்கூடாது. எப்படியும் மசோதாவை நிறைவேற்றுக'' என்று அடிக்கடி, தீர்மானங்கள் நிறைவேற்றின.

பண்டிதநேருவும் அவரது மந்திரிமார் பலரும் இம்மசோதா நிறைவேற்றப்பட வேண்டுமென ஆவலோடிருந்தனர்.

பல மாகாண மந்திரிமார்களும், நிச்சயம் இம்மசோதா நிறைவேற்றப்படுமென்றே நம்பினர். ஆனல், மசோதா சட்டமாகவில்லை! கைவிடப்பட்டது!!

ஆதரித்தோர் பலர் — ஆனலும் நிறைவேறவில்லை!

ஏராளமானோர் ஆதரித்தும், நிறைவேருத அளவுக்கு தடுத்தோர் யார், எந்த சக்தி மசோதாவை கைவிடும்படிச் செய்தது, என்ற கேள்வி நிச்சயம் எழும்பும்!

சனுதனிகள்
சங்கராச்சாரியார்கள்

நமது புதிய விற்பனையாளர்

பங்களூர் முழுவதுமுள்ள பத்திரிகை ஸ்டால்களில் 'திராவிடநாடு' விற்பனைசெய்ய ஏற்பாடாகியிருக்கிறது.

விவரங்களுக்கு:—

காலிகா நியூஸ் ஏஜன்ஸி,
ரஸல் மார்க்கட் (எதிர்ப்புரம்)
பங்களூர்.

தம்பிரான்கள்
முத்ராதிகாரிகள்
ஆர்ய சமாஜிகள்
பழுத்த வைதீகர்கள்
அல்லாடி போன்றோர்
'இந்து' இதழ் முதலியவை
இந்துமகா சபையினர்
ஆர். எஸ். எஸ். கோஷ்டி.

இவர்களே இம்மசோதாவை எதிர்த்தோர். இவர்கள் பக்கமும் சேராது, மசோதாவையும் ஆதரிக்காத நிலையில் 'அவசரம் ஏன்? பிறகு பார்க்கலாமே!' என்கிற சமரச நிலையில் ராசேந்திர பிரசாத் போன்ற இன்னும் சிலர்!

மசோதாவை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தோர் நடாத்திய ரசாபாசங்கள் — அதிகம். அதைத் தூண்டிவிட, பல பண முதலைகள், தயாராகயிருந்தனர், டால்மியா போல.

பண பலத்தோடு கூடிய ஒரு சிலரின் ஆதரவோடு வைதீகம் சீறிற்று—ஒரு ஆஷாடபூதி, உண்ணாவிரத நாடகம் மேற்கொண்டார்.

"மதத்துக்கு ஆபத்து வந்துவிட்டது" — என்று கூச்சல் எழுப்பினர்.

அகில உலகம் பற்றி ஆராயும் "இந்து" இதழோ 'கை விடுங்கள்' என்று தலைப்பிட்டு 1948 டிச 17ந் தேதி எழுதிற்று, "இம் மசோதா இந்து மதத்தின் அடிப்படையையும் சமுதாய அமைப்பையுமே சீர்குலைக்கிறது" என்பதாக.

அல்லாடி போன்றோர் பார்லிமெண்டில் பேசுகையில் 'பெண்களுக்கு சொத்துரிமை ஏன்? விவாகரத்து உரிமை ஏன்?' என்று, குட்டிக் கதைகளோடு பேசலாயினர்.

ஆனால் அவர்கள் ஆவேசம்காட்டுமளவுக்கு மேற்படி மசோதாவில் என்ன இருக்கிறது, என்று பார்த்தால் வேடிக்கையாக இருக்கும்!

மேற்படி திருத்த மசோதாவில் கூறப்பட்டிருக்கும் திருத்தங்கள் மிகமிகச் சாதாரணமானவையாகும்.

பெண்களுக்கும் சிறிது உரிமைகள் தருவது — இதுதான், அதன் முக்கிய நோக்கம்.

இதற்கு எவ்வளவு எதிர்ப்பு! சனாதனங்களின் சீற்றம்! பணம்படைத்தோரின் பாய்ச்சல்!

"இந்து மதம் புனிதமானதன்றோ? அதிலா இவர்கள் கைவைப்பது"

"அனாதி காலத்ததாச்சே! அதைத் திருத்த இவர்கள் யார்?"

தி. மு. க. உதவி நிதிக்காக

9—10—51
செவ்வாய்
இரவு
10-மணி

திருச்சி தேவர் ஹாலில்

மு. கருணாநிதி
பங்கேற்கும்

வாழ முடியாதவர்கள்

நாடகம்

பொதுச் செயலாளர் அண்ணாதுரை தலைமையில்

இயக்கத் தோழர்கள், நடிக மணிகள் பங்கு கொள்வர்.

கருத்துச்சோலை காண வாரீர்! வாரீர்!!

"மனுவும் மாந்தாதாவும் செய்து வைத்த ஏற்பாட்டையா இந்தச் சாதாரண மானிடர்கள் திருத்துவது?"

இது போல கூச்சலிட்டனர். 'ஐயோ! ஐயோ!!' என்றலறினர்.

அவர்கள் அலறல்களுக்குத் தக்க பதில் அளிக்கத் தவறவில்லை—பல உறுப்பினர்கள். சட்டமந்திரி அம்பேத்கார் ஒரு நாள் ஆர்வமுடன் சொன்னார்:

"வேதங்களை நம்புபவன் நானல்ல. வேதங்களுக்கு நான் மிகப் பெரும் விரோதி. ஏனெனில் பகுத்தறிவைக் கொண்டு ஆராயும் சுபாவம் என்னுடையது. ஆகவே, எதையும் அப்படியே நம்பிவிடமாட்டேன். எனக்கு அகிம்சையில் நம்பிக்கை

யுண்டு. அகிம்சா தத்துவ... பிராம்மண சமூகம் ஏற்றுக்... டிருக்கிறது. ஆனால் பிராம... கள் ஒரு போதும் அதன்படி... தில்லை. அதுமட்டுமல்ல, சம... மனப்பான்மையோடு நட... இல்லை. அதனால்தான் இந்... கம் சிறிதும் முன்னேற்ற... வில்லை. இந்து சமூகம் தன்... வந்தோரையெல்லாம் வரவே... தன்மை படைத்தது என்று... மையோடு பேசினர். அ... பெருமை எப்படி வேண்டு... லும் இருக்கட்டும். ஆனால் ... சமூக அடிப்படையை சிறி... மாற்றிக் கொ... வில்லை. சூத்... அடிமை... பெண்கள் ... தவர்கள் ... நிலையை ... விடவில்லை.

இந்து ச... மறுமலர்... யடைந்து ... றது என்று... கிறார்கள். ... முதல் இ... வரை, மா... ஏற்பட்ட... தெல்லாம் ... முறையினா... பட்ட இந்... கம் சீர்குலை... வந்திருக்கி... என்பதை ச... ரம் படித்... அறிவர்."

* * *

இந்து மதத்தின் பெரு... இம்மசோதாவால் சீர்குலைவ... சொல்லி எதிர்த்தனர், சனாதன...

ஆனால் இந்து மதம் பெண்... திற்கு இழைத்து வந்திரு... கொடுமை, சொன்னாலே நாக...

சூதிலே வைத்தனர் ஒருத்... அவையிலே அவள் ஆடை... அவிழ்த்தான் மற்றொருவன்! சந்திரன் தன் மனைவியை ... வைத்தான்! நாயனார் ஒரு... மனைவியைத் தத்தம் செ... அகலிகையைக் கல்லாக்கி... கௌசிகன்! இவ்விதம் பெ...

11-ம் பக்கம் பார்க்க

★ அநியாயம் ★

★

சர்க்கார் அதிகாரிகள் இனி எந்த றைப்படி நியமிக்கப் படுவார்கள் ன்பது குறித்து சென்னை அர ங்கம் ஓர் உத்திரவு வெளியிட் ருக்கிறது.

சுயநலமிகள் சூழ்ச்சியால் சாகடிக் ப்பட்ட வகுப்புவாரி முறைக்குப் திலாகவே இந்த கட்டளை பிறப் க்கப்பட்டிருக்கிறது.

இதன்படி இனி உத்யோக நிய னங்களில் 20-க்கு 3-இடங்கள் ாழ்த்தப்பட்டோருக்கும் மலை குப்பினருக்கும் 5-இடங்கள் பிற் பாக்கு வகுப்பினருக்குமாக ஒதுக் ப்பட்டிருக்கிறது, இப்புது உத்தி வு மூலம்.

மீதமிருக்கும் 12-இடங்களுக்கு குதியின்படி ஆட்கள் நியமனம் சய்யப்படுவார்கள.

தாழ்த்தப்பட்டோர் மலைசாதி	15%
பிற்போக்கு வகுப்பு	25%

போக மீதம் 60% தகுதிக்காக டப்பட்டிருக்கிறது, இப்படி உத் ரவு மூலம்.

முன்பிருந்த கம்யூனல் ஜி. ஓ. ,

பார்ப்பனர்கள்	14 %
பார்ப்பனரல்லாதார்	57 o/o
முஸ்லீம்	14 o/o
கிறிஸ்தவர்	14 o/o
தாழ்த்தப்பட்டோர்	14 o/o

என்ற விகிதப்படி உத்யோக நிய னங்கள் நடைபெற்று வந்தன.

அந்த நிலையே சரியில்லை, தங்கள் தொகை தாச்சாரத்துக்கு அதிகமாக தி பெற்று வருகின்றனர் பார்ப் ர்கள் என்ற பொதுக்குறை எங் தெரிவிக்கப்பட்டு வந்தது.

நியாயமாக நூற்றுக்கு மூவராக ருக்கும் அவர்கட்கு 14-இடங்கள் ரிக்கப் பட்டனவென்றால் அதி ந்த அநியாயத்தை என்ன ன்று சொல்வது!

அவ்வளவு அதிகமான வசதியைப் பெற்றிருந்தும் கூட அந்த நூலேந்திகளின் ஆசை, சும்மாயில்லை.

அதிக இடம் வேண்டுமென போர் துவக்கினர் — கம்யூனல் ஜீ. ஓ. வை. வீழ்த்தினர்—வெற்றியும் பெற்றனர், தங்கள் குலப்பெரியவர்களின் சூது காரணமாக.

நாட்டிலெழும்பிய கிளர்ச்சியால் இந்திய பார்லிமெண்டில் பிற்பட்டோருக்கு சலுகை செய்யும் வகையில் சட்டம் திருத்தப்பட்டது.

அதையொட்டியே, இப்போது இந்த உத்திரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. இதைக் காணும் போது வேதனையே வரும்!

நூற்றுக்கு 70 பேரான பார்ப்பனரல்லாத சமுதாயத்துக்கு இருபத்தைந்து இடங்களை "ரிசர்வ்" செய்வார்களாம்!

மற்ற அறுபது இடங்களை தகுதியுடையோர், நிரப்பலாமாம்.

தகுதியுடையோர் என்பதில் பார்ப்பனருள்பட எல்லாமக்களுமே அடங்கியுள்ளனர்.

பார்ப்பன சமுதாயம் கல்வித் துறையில் மட்டுமல்ல எல்லாத் துறைகளிலுமே முன்னேறிய சமுதாயம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

அவர்களையும் சேர்த்து தகுதிக்காக என்று அறுபது இடங்களையும் விட்டால், தகுதியின்பேரால் அவர்களைத் தவிர வேறு எவரே, பெறுவர்!

மானையும் பசுவையும் ஒரு கூண்டிலடைத்து அவைகளுடன் புலியையும் சேர்த்து விட்டு தகுதியின் பேரையும் சொன்னால் எது ஜயிக்கும்?

மானும் பசுவும், புலியால் சாகடிக்கத்தானே படும்.

இருந்தும், இந்த உத்திரவைப் பிறப்பித்திருக்கிறார்கள்.

இது பார்ப்பனரல்லாத சமுதாயத்துக்கிழைக்கப்படும் பெரிய அநியாயம் என்றே சொல்வோம்.

வீழ்ந்து ஒழிந்த இனத்துக்கு வாழ்வு தரும் ஏற்பாடா, இது? ஐயோ உலகமே!

★

ஜார் பாதை

பத்திரிகைக் கட்டுப்பாடு சட்டம் என்று இந்திய பார்லிமெண்டில் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

ஆட்சேபகரமான முறையில் பத்திரிகைகள் எழுதாமல் தடுப்பதே இச் சட்டம் என உள் நாட்டு மந்திரி ஆச்சாரியார் கூறினர்.

ஆனால் இச் சட்டம் பத்திரிகைகளின் சுதந்திரத்தை ஒழித்துக் கட்டும் அக்கிரமச் சட்டம் என பலர் கூறுகின்றனர்.

ஆட்சேபகரமானது என்பதை அரசாங்கம் தீர்மானிக்குமாம். எந்தப் பத்திரிகையாவது ஆட்சேபகரமாக எழுதுகிறது என்று தோன்றுமேயானால் இச் சட்டத்தை வீசுவராம்!

பத்திரிகைக்கு ஜாமீன் கோரப்படுவது மட்டுமின்றி, அச்சகத்தாரும் அபராதத்துக்கும் தண்டனைக்கும் உள்ளாவராம்.

இந்தச் சட்டம் ஏற்பட்டு விட்டால், பத்திரிகை நடத்துவோர் திண்டாடவேண்டியதுதான். எழுத்தாளர்கள் எதையெழுதினால் ஆட்சேபமிருக்காது என்று யோசித்துத் திணற வேண்டியதுதான்.

மனதில் படுவதை மக்களுக்குத் தெரிவிக்க எவருக்கும் உரிமையுண்டு. இதையே எழுத்துச் சுதந்திரம் எனக் கூறுவர்.

ஆனால், அது, பறிக்கப்படுகிறது. எழுத்தாளர்கள் கையை முறிக்கின்றனர்.

இந்த சட்ட மசோதாவை நிறைவேற்ற நேரமில்லை!

ஆனால், இந்த அக்கிரம அடக்குமுறை மசோதாவை சட்டமாக்க மட்டும் நேரமிருக்கிறது!!

கடைசி காலத்தில், ஜார் பாதையில் வெகு வேகமாக ஓடுகின்றனர்! ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மண்ணுக்குள் புதைக்கின்றனர்!!

திராவிடநாடு

ஞாயிறு] 7—10—51 [காஞ்சி

'துன்பபுரி'யில் இன்பம்

அக்டோபர் முதல் நாள்—ஆசிய மண்ணின் ஒரு கண் ஆனந்த ஒளி பெற்று, மகிழ்ந்தது.

சீன நாடு, சிந்தையெலாம் களிக்க தனது இரண்டாவது திருவிழாவைக் கொண்டாடியிருக்கிறது.

பழமைக்கும் பாசிசத்துக்கும் மெருகிட்ட சியாங்கேஷேக் பிடியிலிருந்து விடுதலை பெற்று, இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன.

சீன மக்கள் சிங்காரத்தோடு உலவத் துவங்கிய இந்த இரண்டு ஆண்டுகளில், உலகின் கவனத்தைக் கவர்ந்து விட்டனர். மாபெரும் ஜன சமுதாயம் நிரம்பிய சீனாவை, 'துயர நாடு' என்றே வர்ணிப்பர் முன்பெல்லாம்.

அத்துயர பூமியில் இன்பம் முகிழ்த்தது.

வீரர் மாசே—துங் தலைவரானார்.

பொது வாழ்க்கையில் புறமுதுகிடா அந்தச் செயல் வீரரின், திறமையும், உறுதியும், சீனாவின் வாழ்விலே, தேனாற்றெடுக்கச் செய்து வருகிறது.

சீனா, ஆசியா கண்டத்தின் பெரிய தேசம். அதற்கு அடுத்த வரிசையில் வருவது, இந்திய உபகண்டம்.

இந்திய மண்ணின் கலாச்சாரமும் சீன நாட்டின் பண்பாடுகளும், சகோதரர்கள் போன்றவை.

இங்கு நிரம்பியிருக்குமளவு அங்கும் மூடக் கொள்கைகள் நிரம்ப நிரம்ப உண்டு. பழமைப்பித்தும், வைதீக வாடையும் அதிகம் உண்டு.

ஆனால், அந்த இருளை விலக்கப் புது ஒளி அங்கு எழும்பி—பரவி வருகிறது!

* * *

1910-ல் சீன தேசத்தின் பழமை வாழ்வில் ஒரு புது நிலை பிறந்தது. கொடுங்கோலர்களெனத் தூற்றப்பட்ட மன்னர்பரம்பரையான மஞ்சுவமிசத்தை, வீழ்த்தி வெற்றி பெற்றனர், புதுமலர்ச்சி (கொமின்டாங்) இயக்கத்தினர்.

ஆனால், அன்று மக்களிடம் எழும்பிய ஆவேசத்தைத் தனது சுயநலத்துக்குப் பயன் படுத்தினார், சியாங்—கே—ஷேக். பல்லாண்டுகள் சீன ஆட்சி இயந்திரம், அவரது கையிலே சிக்கி, உருண்டது. ஆனால் அந்தக் கால முழுமையும் சீன மக்கள் போருக்கும் ஏழ்மைக்கும், எதிர்ப்புக்கும் ஆபத்துக்குமிடையே அவதிப் பட்டனர்.

அந்நிய வல்லூறுகளோடு கை கோர்த்துக் கொண்டு சியாங்கேஷேக், தன் இஷ்டம் போல் உலவினார்.

மக்கள் மன்றத்தில் எழும்பிய "நமதே நாடு" என்கிற ஆர்வத்தைத் தன் ஆட்டக்காயாக வைத்துக்கொண்டு, சீன நாட்டை தனது சதுரங்க மேடையாக ஆக்கினார்.

அந்தச் சர்வாதிகாரியின் முதுகெலும்பு, எழுச்சி வீரன் மாசேதுங் மூலம் தூள்தூளாயிற்று!

ஊழல் நிறைந்த கொமின்டாங் கட்சி, தொலைந்தது. மாசு அகன்றது. எதேச்சாதிகாரம் ஒழிந்தது. புதுவாழ்வு அரும்பிற்று. சீன மக்கள் குடியரசு 1949 அக்டோபர் முதல் நாள் மலர்ந்தது!

* * *

ரஷ்ய நாட்டில், வேதனைக்காளான மக்கள் புத்துணர்ச்சி பெற்று ஜார் ஆட்சியை வீழ்த்தியதும், ஒருபுதுப் பொம்மை, தோன்றினான். மக்கள் ஆர்வத்தின் மீது வாழலாமென மனக் கோட்டை கட்டினான். மார் தட்டிப் புறப்பட்ட அத்துரோகி கிரேன்ஸ்கியின் ஆசை நெடு நாள் நீடிக்கவில்லை. அவனே அழிந்தான்—புரட்சிப்படையால்!

அதேபோன்று, சீன சரிதத்தில் இடம் பெற்றான், சியாங்கேஷேக்.

அவனை ஆதரித்தோரே, இன்று, மக்கள் ஆர்வத்தின் மீது ஆட்சிக் கோட்டை அமைத்த இந்திய பூமியின் காங்கிரஸ் ஆட்சியாளரும்.

அதனால்தான், 'நேருவே-சியா ஆகாதீர்!' என்று அடிக்கடி, ந லோர் பலர், அறிவுரை கூறுவது.

சரித ஏட்டில், மக்கள் ஆர்வ தின் மீது மாளிகை கட்டியோர், ம கள் மடமையில் கிடக்கும்வ ஏத்தி வாழ்ந்திருக்கின்றனர். ஆ அவர்கள் இன்பகாலம், விழிப்பு சமுதாயத்தால், இருட்டில் புதை கப்பட்டிருக்கிறது.

இதன் சான்றுகள் தா கிரென்ஸ்கி எனும் சூதனை வீழ் திய ரஷ்யா! சியாங் எனும் எதே சாதிகாரியை விரட்டிய சீனா!

உலகிலேயே மிகப் பெரிய நா கள் இவை இரண்டும். அடுத்த வ சையில்நிற்பது, இந்தியஉபகண்ட

இங்கு இன்று ஆள்வோரு 'பிரிட்டிஷ் ஏகாதிபத்திய விரட்டுவோம்' என்று மக்களி மெழுப்பிய ஆவேசத்தால், ஆட் பீடம் ஏறியோர்தாம். அதோ சியாங்கின் நண்பர்களாகவும் இரு தோர்தாம்.

சரிதச் சக்கரம் சுழல்வதுபோ இவர்களும் எதேச்சாதிகாரிகளா தான் இருக்கிறார்கள்! நடக்கிறா கள்!!

ரஷ்யபூமியிலும் சீனதேச லும் அட்டகாசம் நடாத்தி அ தோர் அந்தப் பாதையில் நட னரோ அதே பாதையில்தான் இ குள்ளோரும் செல்லுகின்றன கிரென்ஸ்கியைப்போல ஒரு ச மும், சியாங்குபோல வேறெ சமயமுமாக இவர்கள் ஆவேசவெ யாடுகிறார்கள்!

எனவே இவர்கள் எதிர்காலம், யூகிக்கவேண்டிய ஒன்றல்ல; ஏ னில் சீனாவும் ரஷ்யாவும், நமக் சான்றாக இருக்கின்றன.

ஆகவே, எதேச்சாதிகாரம் ஒ யட்டும், அதற்குக் கால் கோ வோர் எவராயினும் அழியட் அதற்கான பணியை நாம் என் தவறாது செய்வோம் என உ எடுத்துக்கொண்டு—புது யுகத் இரண்டாவது மலரான செ சீனாவை வாழ்த்துகிறோம். வா சீன மக்கள்! வாழ்க அதன் தலை மாசே—துங்!!

*

11-ம் பக்கத் தொடர்ச்சி

கோழைத்தனம் — வைதீகமிரட்டுக்குப் பணியச்செய்துவிட்டது. எதிர்த்து நிற்கும் துணிவில்லை!

இரத கஜ துரகபதாதிகள் கொண்டதல்ல, வைதீகம். இரத்தம் கண்டாலே நடுங்கும். சாபமிடுவேன் என்ற சலசலப்புப் பலிக்கும் காலமுமல்ல இது.

வைதீகம்—செத்தபாம்பு! அதன் மிரட்டலுக்கா அடங்குவது?

வைதீகத்திடம் தந்திரமிருக்கலாம், சாகசத் திட்டங்களிருக்கலாம். ஆனால், அதற்காகவா, நல்ல காரியத்தை விட்டு விடுவது!

துருக்கிநாட்டில், பெண்களை மண்ணென மதித்தனர். மனித உயிராக வேமதிக்க வில்லை. முக்காடிட்டு வரவேண்டும்—மூலையிலேயே கிடக்க வேண்டும். ஆணோ, எந்தக்காரியத்தையும் செய்யலாம், எத்தனை மனைவிகளை வேண்டுமானாலும்மணக்கலாம்.

இந்த முறையிருந்தது, முன்பு. ஆனால் இது அத்தனையையும் ஒழித்தார் வீரர் கமால். அப்போதும் அந்நாட்டிலுள்ள பழமைவிரும்பிகள் பாய்ந்தனர், படபடத்தனர். ஆனால் முஸ்தபா கமால்பாட்சா, சட்டத்தின்மூலம் அவர்கள் கொட்டத்தை அடக்கினார். ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாகவாழும் நிலையை உண்டாக்கித் தந்தார்.

நேரு, கமால் ஆகவில்லை!

அடிபணிந்துவிட்டார்!!

தன்னால் ஆதரவுதரபட்ட மசோதாவைக் கொணர்ந்த சட்ட மந்திரி அம்பேத்கார் விலக—அதைப்பார்த்துக்கொண்டிருந்தார் பதறவில்லை!

தனது மந்திரிசபை ஒத்துக்கொண்ட ஒரு மசோதா. குப்பைத் தொட்டிக்குச் செல்கிறது. அது கண்டு கொதித்து ஒருமந்திரி விலகுகிறார்!

அதைப் பார்த்துத்துடிக்கவேண்டிய நேரு இதயம்சும்மாயிருந்திருக்கிறது!

* * *

வைதிகபுரியால் விளைந்த அக்கிரமங்கள் அதிகம். அதன் வஞ்சகத்தால் அழிந்த சாம்ராஜ்யங்கள் பல உண்டு. அதே பாதையில்நடக்கவே இங்குள்ள மதகுருக்கள்முனைகின்றனர். இந்த ரசபாச 'ரஸ்புடீன்களை' யாவளாவிடுவது? சோற்றுத் துருத்திகளுக்கா, சுதந்திரவீரர்கள் பணிந்துவிடுவது?

(Indian Social Re-Former) என்கிற இதழ் கேட்கிறது. ஆவேசமாக. "நாய்கள் காட்டும் பாதையில் நடந்தா நாம் செல்வது? முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை யிடும் மூர்க்கர்களுக்கா நாம் பணிவது? உண்ணாவிரத ஆஷாடபூபதிகளுக்கு அசைந்து நிற்பதா ஆட்சி இயந்திரம்?"

சனாதனிகளின் சலசலப்புக்கு நேரு போன்றார் பணிந்து விட்டனர்! விந்தை இது! பணிந்ததால், வைதீகத்துக்கு உயிரூட்டியும் விட்டனர்!!

வைதீகம், செத்துக்கொண்டு வருகிறது. சனாதனம் சாக்காட்டில் நிற்கிறது! அணையும் விளக்கு ஒளிவிடுவதுபோல, அதன் பாதுகாவலர்கள், அலறலாம்; ஆர்ப்பரிக்கலாம்.

அதைக்கண்டு அஞ்சுவது, வீரனுக்கு அழகல்லவே! விட்டிற் பூச்சிக்கா வேலும் வாளும் ஏந்தியவன் நடுங்குவது?

ஏனோ, நேரு பணிந்துவிட்டார்.

இந்த மசோதாவின் வீழ்ச்சி, வைதீகத்தின் பலத்தால் என்று நம்ப முடியாது.

ஏனெனில், வைதீகம், அவ்வளவு பலம் வாய்ந்ததல்ல. வஞ்சகத்தாலும் வாய்மிரட்டாலும் பண பலத்தாலும் பலரை வீழ்த்தும் வசதி உடையதாயிருக்கலாம். ஆனால் அவையாவும் சகஜமானதுதான்! எதிர்பார்த்ததுதான்!! இருந்தும் இவர்கள், வளைந்துவிட்டனர். அதிகாரமும் ஆளம்பும் படைத்தோர், ஆனாலும் பணிந்து விட்டனர்.

இவர்களை கோழைத்தனம், வளைந்து கொடுக்கச் செய்து விட்டது.

இல்லையென்றால் நாலரை ஆண்டுகளா இதற்குக் காலம் பிடிக்கும்! எத்தனை மசோதாக்கள் இரண்டொரு நாட்களில் சட்டமாகியிருக்கின்றன!

கடந்த வாரம் (அக் 2-ல்) புது டெல்லியில் பேசுகையில் பண்டித நேரு கூறியிருக்கிறார், "வகுப்புவாதத்துக்கு இடங் கொடமாட்டேன். இந்தசட்ட மசோதாவை நான் எப்படியும் நிறைவேற்றியேதீருவேன்" என்பதாக.

அதாவது, தேர்தலுக்குப் பிறகு மறுபடியும் சட்டசபை கூடுமே அதில் நிறைவேற்றிவிடுகிறேன் — என்கிறார்.

நேரு, பேசிய மேற்படி கூட்டம், தேர்தல் பிரச்சாரத்துக்காகஏற்பாடு செய்யப்பட்டதாம். அதுவும் முதல் பிரச்சாரக் கூட்டம்! அதிலே பேசுகிறார், இந்தசட்ட மசோதாவை எப்படியும் அடுத்த முறை நிறைவேற்றுகிறேன், என்று.

அதைக் கண்டதும், என் நண்பர் ஒருவர் என்னைக் கேட்டார்.

"தேர்தல் தந்திரமோ,இம்மசோதாவை கைவிட்டது?"

"எப்படி?"

"அடுத்த முறை தேர்ந்தெடுத்தால் அதைச் செய்வேன், இதைச் செய்வேன் என்றுகூற ஏதுவும் இல்லையல்லவா காங்கிரஸ்காரருக்கு?"

"ஆமாம்!"

"வைதிகவெறி பெருத்துவிட்டது. வகுப்புவாதம் கொட்டமடிக்கிறது. அதை எப்படியும் கருவறுக்கவேண்டும். ஆகவே, பொதுமக்களே, எங்களை ஆதரியுங்கள்!—இப்படி பேசலாமல்லவா?"

"யாரே நம்புவர்?"

"மடமை ஒழியவேண்டுமென விரும்பும் வாலிப உலகு வைதீக வெறி கண்டு பதறுமல்லவா?"

என் நண்பரின் சந்தேகம்போல பலருக்கு எழும்பக்கூடும். அதில் உண்மை இருந்தாலும் இருக்கலாம்!

தேர்தல் பிரச்சாரத்துக்காக, இத் தோல்வி யேற்றனர். தங்களை முன்னேற்ற வீரர்கள் என்று காட்டிக் கொண்டு, பழமையோடு போரிடவாரீர், என்று புதுச் சங்கநாதம் எழுப்ப முனைகின்றனரோ, என்ற ஐயம் எழும்புவதில் — அர்த்தமில்லாமலுமில்லை.

ஆனால், கொள்கை விற்று, கொல்லைப்புற வாயிலில் ஆதரவு தேட முனைவது, நேருவின் பலவீனம் மட்டுமல்ல. அநாகரீகமானது!

இந்து சட்ட மசோதாவை கைவிட்டதற்கு எது காரணமானலும், நமக்குள்ள வருத்தம்,

நிறைவேற்ற நேரம்

போதிய வசதி

அதற்கான செல்வாக்கு

அத்தனையுமிருந்தும் கைவிட்டனரே என்பதுதான்! இந்த விசித்திரத்துக்கு வைதீகக் கூச்சல் காரணமாக இருக்க முடியாது. ஏனெனில் அதை, மசோதா கொணர்ந்தபோதே எல்லோரும் எதிர்பார்த்தனர்.

சட்ட சபையில் பலமுறை "தேர்தல் வருகிறது. அதை எண்ணியாவது இம்மசோதாவைக் கைவிடுங்கள்" என்று பலர் பேசியிருக்கின்றனர்.

காங்கிரஸ் தலைவராயிருந்த டாக்டர் பட்டாபியும் இதே விதமாகத்தான் பேசினார்.

தேர்தலை நினைத்து, இம்மசோதாவை நிறைவேற்றினல் தோற்றுவிடுவோம்—என்று பயப்பட்டிருக்கவும் முடியாது, நேரு சர்க்கார்.

ஏனெனில், இம்மசோதாவை விட, இந்த ஆட்சி மீது, மக்கள் ஆத்திரமும் அதிருப்தியும் கொள்ளத்தக்க நிகழ்ச்சிகள் ஆயிரமாயிரம் உண்டு.

அப்படியும், மக்கள் ஒருபோதும் இம்மசோதாவை எதிர்க்கவில்லை—ஆதரவே தந்தனர் பல மாநாடுகளில்.

ஆகவே, இம்மசோதாவை, தேர்தல் நெருங்கும் இந்நேரத்தில் கைவிட்டதும், பிறகு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இதைபற்றிப் பேசுவதும், நண்பர் கருதுவது போல, சுயநல வேட்டையே காரணமாயிருக்கலாம்.

இது உண்மையெனின்—நேரு போன்றவர்கள் இந்த வழி பாய்ந்தது, மிக மிகக் கேவலமாகும்.

கொள்கைக்காக குண்டு ஏந்தியவர்களைச் சரித்திரம் சந்தித்திருக்கிறது. வீர இரத்தம் சிந்தி அதில் அமிழ்ந்தோரைக் கண்டிருக்கிறது. ஆனல், கொள்கையிழந்த கோழைகள், வரலாற்றில் மிகச் சொற்பம். கோழைத் தனத்தாலும், குதர்க்க புத்தியாலும், இந்தக் கொல்லை வழியை மேற்கொண்டவர், இவரென்றால், சே, சே! வெட்கம்! அநாகரீகம்!!

தேர்தலோ, தேர்தல்!

தேர்தலில் ஆள் பொறுக்கும் வேலையில் காங்கிரசார் முனைந்துவிட்டார்கள். தோழர் காமராஜரும் இன்னும் சிலரும் வெளியிடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு, சொந்த இடம் திரும்பிவிட்டனராம்.

* * *

வரும் தேர்தலில், பல பழைய காங்கிரஸ்காரர்கள், நிற்பதற்குத் தமக்கு விருப்பமில்லையென வலியுறுத்தியுள்ளனராம். ஏனெனில் காங்கிரஸ்போக்கும் அதை நடாத்திச் செல்வோரின் அடாபிடிகளும் பிடிக்கவில்லையாம்! இவர்களை நிற்குமாறு, பிரபலமானோர், வலியுறுத்தியும் அவர்கள் இசையவில்லையாம்.

* * *

வரும் தேர்தலில் பணம், காவிரி நீர்போலப் பெருகியோடலாம் — காங்கிரஸ் பிரதிநிதிகளிடமிருந்து. அதற்கான 'ஊற்று'களைக் காமராஜர் கண்டு பிடித்துவிட்டாராம். பல 'வாய்க்கால்கள்' இப்போதே நீரை ஏந்திவந்து கொட்டிக் கொண்டே உள்ளனராம்.

* * *

பழைய உழைப்பாளர் பலர், கட்சியின் நாற்றம் சகிக்காமல் வெளியேறுவதும், ஒதுங்குவதுமாக இருக்கின்றனர். ஆனல், அதற்காக காங்கிரசை நடத்திச் செல்வோர் கவலைப்படுவதாகத் தெரியவில்லை! இப்போது முக்யம் 'தியாகம்' இல்லையே; பணம்தானே!! அதற்கு வழி, புதிது புதிதாகப் பிறந்துகொண்டிருக்கும் போது கவலை எப்படி வரும்?

* * *

காங்கிரஸ் உயிரோடு வாழ 'புது இரத்தம்' வேண்டுமெனக் கூறினரல்லவா, நேரு. அந்தப்புதுஇரத்தம்' புறப்பட்டிருக்கிறதாம்! பெரியபணக்காரரான ராஜா (!) சர் (?) முத்தையாசெட்டியாரின் குடும்டம்இனி கதருடையோடுதான் உலவுமாம்! குடும்பம் என்றால், அவரையும் அவர் தம்பி ராமனதனையும்தான் குறிப்பிடுகிறோம். அவர்கள் காங்கிரஸ் சார்பில் தேர்தலில் நிற்கப் போகின்றனராம். ஐந்து 'ல'காரம் கூட 'அட்வான்ஸ்' ஆகிவிட்டதாம்!

* * *

"புது இரத்தமா, அது?" என்று கேட்கத்தோன்றும் — அவர்களைப் பற்றி நன்றாகத் தெரிந்தோருக்கு. அழுக்கும் பிணியும் நிறைந்ததற்கு அந்தப் பெயர் பொருந்துமா?" என்று கூடக் கேட்பர், விஷயம், விபரம், எல்லாமறிந்தோர். என்ன செய்வது காமாலைக் கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்!

* * *

மாராமத்து மந்திரியார், தனக்குத் தெரிந்த 'பெரிய' புள்ளிகளை அணுகி, 'புது இரத்தம்' தரக் கோரினராம்—சொந்த முறையில். அவர்களில் சிலர், காங்கிரஸ் உடலில் எங்கள் இரத்தம் சேர்ந்தால் நாங்களே அழுகிப் போய் விடுவோமே, என்றனராம்!

* * *

சில 'மாஜி'கள், தேர்தலில் நிற்க வேண்டுமெனத் துடிக்கின்றனராம். ஆனல் எதைச் சொல்லி மக்களிடம் போவது என்று அஞ்சுகின்றனராம். ஆசை விடவில்லை — ஆகவே, பலமான யோசனையில் ஆழ்ந்து கிடக்கின்றனராம்!

* * *

"சி. ஆர். சங்கதிஎன்ன?" என்று கேட்கிறார், ஒரு கல்கிப்பிரியர். அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது நமக்கு!

உரிமையாளர்,
எம். எஸ். சிவசாமி
பிரதர்.
தூத்துக்குடி.

துஷ்பிரயோகம்

—✲—

நேர்மையின் சிகரம்

தியாக ஜோதி

குணக் குன்று

இத்தகைய வார்த்தைகளால், இன்றும் பண்டித நேருவை அர்ச்சிக்கப் பலருண்டு. அவரது தியாக வாழ்வைப் பற்றியும், குணத்தின் அருமை குறித்தும், காங்கிரசில் பல்லாண்டுகள் உழைத்த பண்டித மிஸ்ரா கேவுலமாகப் பேசினாலும், நம்போன்றோர் நாவு அந்த அளவுக்கு சொல்லவும் கூசுகிறது. காரணம், நாம், மிஸ்ராக்களல்ல! பண்டித நேருவின்பண்புகளை, தனிமனிதன், என்றளவில் பலமுறை பாராட்டியிருக்கிறோம்.

ஆனால், அவரது போக்கு,வூரவர சர்வாதிகாரப் பாதையை நோக்கியே உருள்கிறது. மிஸ்ரா கூறுவது போல, அதிகார வெறிபிடித்து, அதன் மூலம் காரியங்களைச் சாதிக்கத் திட்டம் தீட்டுகிறாரோ என்று எண்ணத் தூண்டுகிறது.

பண்டித நேரு, இப்போது காங்கிரஸ் தலைவர். தலைவர் என்கிற ஹோதாவில் இரண்டொரு தினங்களுக்கு முன் வேண்டுகோள் ஒன்றை வெளியிட்டிருக்கிறார். காங்கிரஸ் கட்சிக்குத் தேவையான தேர்தல் சம்பந்தப்பட்டது, அந்த வேண்டுகோள்.

அதில், எல்லோரும், ஏழையும் பணக்காரரும், தங்களாலியன்றளவு காங்கிரஸ் இயக்கத்துக்கென அளிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

சாதாரண பிரமுகர்கள் எத்தனையோ பேர் இதுபோலத் தினசரி வேண்டுகோள்கள் விடுத்துக் கொண்டுதான் உள்ளனர். தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர் காமராஜரும் வேண்டுகோள் விடுகிறார்! அலைந்து பணம் குவிக்கிறார்!!

இவைகளைப் பற்றி நாம் கவலைப் படவில்லை—கண்டித்து எதுவும் கூறியதில்லை. காரணம், கட்சி வளர்ச்சிக்காக ஏதோ தங்களாலானதைச் செய்கிறார்கள் என்பதே.

ஆனால், இப்போது பண்டித நேருவே வேண்டுகோள்விடுக்கிறார்! காங்கிரசுக்குப் பணம் தாருங்கள் என்று அஞ்சலி செய்கிறார்!!

நேரு, காங்கிரஸ் தலைவர் மட்டுமல்ல; இந்திய உபகண்டத்தின் முதல் நிர்வாகியும் கூட.

முப்பது கோடி மக்களை ஆளும் பொறுப்பிலிருப்பவர்—பண்டித நேரு. அவர் வேண்டுகிறார் பணம் தேவையென்று — நாட்டோரைப் பார்த்து.

*   *   *

"என்னவேண்டும்? பெர்மிட்டா! நாளை இரவு மடியில் கனத்தோடு வா!"

"உத்யோகம் வேண்டுமா, நூறு! நூறு!!"

இதுபோன்ற பேச்சுகள், பல கதருடைகளிலிருந்து, அன்றன்றாடம் பற்பல இடங்களில் உலவிக்கிடக்கின்றன.

உள்ளூரில் கொஞ்சம் ஆடி அசையும் காங்கிரஸ் பிரமுகராக இருந்தால், அவர்களை நோக்கி மக்கள் ஓடுகிறார்கள்.

தங்களுக்கு ஏதாவது சர்க்கார் மூலம் காரியங்கள் ஆகவேண்டுமென்றால், அதற்கானபாதை, ஆங்காங்கே இருக்கும் காங்கிரஸ் பிரமுகர்களே என்று மக்கள் கருதுகின்றனர்.

மக்கள் கருதுமளவுக்கு, காங்கிரஸ்காரர்கள் நடந்துகொள்கின்றனர். அடிக்கடி மந்திரிகளை சந்திப்பதும்! அதிகாரிகளைப் போய்ப் பேசுவதும்!!

இதனால், பணம் சப்தமிடுகிறது, கதர் சட்டைக்குள்.

இந்தக்காட்சி சாதாரணமாக எங்கும் தென்படுவது—இப்போது.

சாதாரணகாங்கிரஸ்காரர்களுக்கே இத்தகைய மதிப்பும் பணமும்! இந்நிலையில், சர்க்காரை ஆளும், மந்திரியாரே மக்களை நோக்கி 'பணம் தேவை' என மண்டியிட்டால்!!

எத்தனை பணபிம்பங்கள் ஓடும்! பணவலை வீசும்!! விலைக்கு வாங்க எண்ணும்!!!

கை நீட்டி அவர்களிடமிருந்து பணம் பெற்றுவிட்டால், பின்அவர்கள் இஷ்டங்களைப்பூர்த்தி செய்யாமலிருக்கமுடியுமா? நடக்கின்ற காரியமா, அது!

காமராஜர்போன்றோர்மீது இது போன்ற குற்றச்சாட்டுகள் வந்த போதெல்லாம்,கண்டித்தவர் நேரு.

"காங்கிரசின் கண்ணியம் காப்பாற்றப்படவேண்டும். பணத்துக்காகப் பல்லிளிக்கக்கூடாது" —இதுபோல அறிவுபோதனைகள் செய்தவர்நேரு.

அவரே, இன்று வேண்டுகோள் விடுக்கிறார்!

தனது மந்திரிப்பதவியின் செல்வாக்கைத் துஷ்பிரயோகம் செய்கிறார்!!

——

புதிய வெளியீடுகள்

—

இன முழக்கம் 0—8—0
மு. கருணாநிதி

திராவிட சம்பத்து 0—3—0
மு. கருணாநிதி

சிந்தனைத்துளிகள் 0—4—0
இராதாமணாளன்

மாஜி மனிதர்கள் 1—4—0
மாக்சிம் கார்க்கி

விதைக்காது விளையும்
கழனி 0—6—0.
அண்ணா.

விற்பனையாளர் கழிவு 25%

அனுப்பும் செலவு இலவசம்.

பாரி நிலையம்,

(A) 59, பிராட்வே சென்னை 1.

வருந்துகிறோம்

தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் கே. கே. நீலமேகம் அவர்களின் திரு மகன் கே. என். ராசு, 26—9—51ல் திடீரென இயற்கையெய்திய செய்தியை நம்மால் தாங்கிக்கொள்ளமுடியவில்லை. தந்தையைப்போலவே, மகனும் இயக்கப் பணியிலே முன்னணியில் நின்ற காளை. திராவிட முன்னேற்றக்கழக வீரர் அணிவகுப்பில்குறிப்பிடத்தக்கவர் — நல்ல இளைஞர். அவரை இழந்துவிட்டோம் என்று எண்ணும்பொழுதே, துக்கம் நம்மைத் திக்குமுக்காட வைத்துவிட்டது. மகனைப் பிரிந்தார் தந்தை. நல்லவீரனை யிழந்தது இயக்கம். காரியமாற்றும் காளையைப் பிரிந்தது நாடு. நாமோ, வருத்தத்தால் வாடுகிறோம்.

—

வரவேற்கிறோம்

"சட்டசபையில் தூங்கலாமா?"

"தூங்கலாம். ஆனால் குறட்டை விடக்கூடாது."

இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களல்ல அவர்கள், கேள்வி கேட்கவும் பதில் தரவுமான வகையில். கேலியும் வீண் பொழுது போக்குகளும் பிடிக்காதவைகள் அவர்களுக்கு, காரியமே கண்ணுகக் கொண்டு கடமையாற்றும் காளைகள். அவர்களை, கடந்த நான்காண்டுகளாக, சென்னை சர்க்கார் சிறைக்குள்ளே பூட்டிவைத்திருந்தது.

எங்கே, ஏதாவது கேள்விகள் கேட்டு நம்மைத் திணறடிப்பரோ என்றபயம் போலும்! நான்காண்டுகள், இரண்டு எம். எல். ஏக்களை சட்டசபைக்கு வராது பூட்டிட்டு, சிறைக்குள்ளே உலவ விட்டது, சென்னை சர்க்கார்!!

கம்யூனிஸ்ட் தோழர்களாகிய அனந்த நம்பியார், வெங்கடேஸ்வரலு ஆகிய அந்த இரண்டு எம். எல். ஏக்களும், கடந்த வாரம் சிறையினின்றும் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

காங்கிரஸ் சர்க்காரின் காருண்யத்தாலல்ல; சென்னை உயர்நீதி மன்றத்து தீர்ப்பின் விளைவாக.

அந்த இருவரையும் இந்நாள் காறும் காரணமின்றி சிறையிலிட்டது தகாது, என்று நீதி, பேசியிருக்கிறது.

அதனால், காங்கிரஸ் ஏதேச்சாதிகாரம் ஏமாற, அவர்கள் வெளியே வந்துள்ளனர்.

அவர்களோடுகூட இன்னும் ஒரு சில கம்யூனிஸ்ட் தோழர்களும் விடுதலை அடைந்து நாட்டிலே பவனிவரத் துவங்கியிருக்கின்றனர்.

நாடு பாலைவனம்போல கிடக்கும் அதிலே நாம் மட்டும் ஒட்டகமாகி நடக்கலாம் என்கிற வெறிதான், காங்கிரஸ் ஆட்சியினரை, சிறையையும் துப்பாக்கியையும் நம்பச் செய்கிறது.

அந்த வெறியால், எதிர்க்கட்சிகளில் ஒரு பகுதியினரான கம்யூனிஸ்ட் தோழர்கள் பலர், சிறைக் கம்பிகளுக்கப்பால் தவித்துக் கிடக்கின்றனர். பாதுகாப்பு சட்டத்தின் பாய்ச்சல், ஆயிரமாயிரம் பேரை, சிறைக்குள்ளே பூட்டிவைத்திருக்கிறது.

அரசியல் காரணமே தவிர, வேறெதுவுமல்ல, அவர்கள் அங்கே, வாடுவதற்கு.

ஆகவே, ஏனையோரையும் விடுதலை செய்வதே, நாகரீகம் படைத்தோர் செய்யவேண்டுவதாகும்.

'பயங்கரவாதிகள்' என்ற வெறிச்சொல்லை வீசி, அரசியல் வாழ்வில் ஈடுபட்ட வாலிப உள்ளங்களை வாட்ட முறச்செய்வது, கொடுமை! கொடுமை!!

அதிலும் ஒரு மாதம் இரண்டு மாதம் அல்ல, பலவருடங்கள்—சிறைக்குள்.

கம்யூனிஸ்டுகளும் மனித சமுதாயத்தில் வாழப் பிறந்தவர்கள். இன்னும் சொன்னால், வாழமுடியாதவர்களை வாழ்விக்கும் நல்லெண்ணத்தோடுபணி புரிபவர்கள்.

நல்லெண்ணம் காரணமாகவே அவர்கள் சுயராஜ்யம் மலர்ந்ததும் 'நேரு சர்க்காருக்கு கை கொடுப்போம்' என்று கர்ஜித்தார்கள்.

ஆனால், அவர்கள் நல்லெண்ணத்தை நம்பவில்லை — தியாகிகள் திருக்கூட்டம். எப்படி நம்பும்? இதயம் தான் இல்லையே!

நம்பாதது மட்டுமின்றி, நாசகாலர்கள் என்று பட்டமும் சூட்டி, பாதாளச் சிறைகளை நிரப்பி 'இது தான் எமது பரிசு' என்று தங்கள் கண்ணியத்தைக் காட்டினர், காங்கிரஸ்காரர்கள்.

அவர்களது வெறிகண்டு உலகம் கை கொட்டுகிறது! நீதி, வெட்கப்படுகிறது!!

இப்போதாவது, உண்மையுணர்ந்து, சிறையில் வாடும் கம்யூனிஸ்ட் தோழர்களை, சர்க்கார் விடுதலை செய்யட்டும்! தங்களுக்கேற்பட்டிருக்கும் அவமானக் கறையைக் கழுவிக் கொள்ளட்டும்!

விடுதலை பெற்று வந்த தோழர்களை வரவேற்கிறோம் — அரசியல் தியாகத் தழும்பு பெற்றனர் என்பதற்காக மட்டுமல்ல; அவர்கள் காங்கிரஸ் பாசிசவெறியைத் தங்கள் சிறை வாழ்வு மூலம் உலகுக்குக் காட்டியிருக்கிறார்கள்.

பழியையும் தூற்றலையும் அகற்றி, அவர்கள் பணி வளரட்டும்!

[illegible] புதுவிருந்து!

பி. எஸ். ஏ.

தீட்டிய

காதலோவியம்

?

விரைவில் வெளி வருகிறது.

திராவிடப்பண்ணை,

A. தெப்பக்குளம், திருச்சி.

வாழ்க்கை விழா

தென்னாற்காடு — மேல்பட்டாம்பாக்கத்தில் 12—9—51 புதன் காலை 6 மணிக்குப் பூவாளூர் அ. பொன்னம்பலனர் தலைமையில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனரின் இரண்டாம் மகள் 'வேனிலா'க்கும், மேல்பட்டாம்பாக்கம் இரா. மாணிக்கனர் மகன் தண்டபாணிக்கும் திருமணம் நிகழ்ந்தது. புலவர்கள் வாணிதாசன், தண்டபாணி, கருணாநந்தன், சம்பந்தன், திரு எம். என். எம். பாவலர், முருகையன் B. A., பண்ணுருட்டி நாகலிங்கம், நா. இராசவேல், புதுவை. வ. பொன்னம்பலம் முதலானோர் மணமக்களை வாழ்த்திப் பேசினார்கள். மிகப்பல வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன. கவிஞரின் நன்றி கூறுதலுடன் மணவிழா இனிது முடிவுற்றது.

11—9—51 மாலை சென்னை செயிண்ட் மேரி மண்டபத்தில் தோழர். மு. கருணாநிதி தலைமையில் கே. பரமசிவம்—பி. ஆர். சுலோசனா திருமணம் வெகுவிமரிசையாக நடந்தது. மணமக்களைப் பாராட்டி தோழர்கள் கே. ஏ. மதியழகன் பி.ஏ., அரங்கண்ணல் ஆகியோர் பேசினர். மணமக்களின் நன்றி கூறலுடன் விழா வெற்றிகரமாக முடிந்தது.

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஒரு பம்பரம்போல் சுற்றிவிடப்பட்டிருக்கிறது.

பெண்களின் பெருமையைப்பற்றிப்பேசாதாரில்லை — இப்போது. அல்லாடியும், அக்ராகாரமும் மசோதாபற்றி எதுவேண்டுமானாலும் பேசலாம்! ஆனால் பெண்களின் மேல் ஆண்களேது? என்பது அவர்களுக்குத் தெரியாமலிருக்க முடியாது. ஆனால் அத்தகைய பெண் குலத்தைப்பற்றி இந்துமதம் சொல்கிறது—அதன் நான்கு வேதங்களில் ஒன்றான யஜுர் கூறுகிறது.

"எப்படி பசுக்கள் உதவுகின்றனவோ அதுபோலவே நல்ல ஸ்திரிகளும் புருஷர்களுக்கு உதவி, அவர்களைத் திருப்தி செய்யவேண்டும்"

பெண் பசுபோல, யாருக்கும் தலை அசைக்கவேண்டுமாம்! இப்படிகூறுகிறது, ஆர்யமதம். மறுத்துரைக்கவோ எதிர்த்துப்பேசவோகூடாது அவள். உடனே பணிந்து நடக்க வேண்டும். ஏனெனில் அவள் மாடு! இதுமட்டுமல்ல, ருக்வேதம் கூறுகிறது.

"ஏ! பெண்ணே, நான் உன்னை இச்சிக்கும் பெருமை பெற்றாய். ஆகவே எனக்கு இணங்கிவிடு."

அவனுக்கு ஆசை! ஆகவே அவள் மறுத்துப்பேசக்கூடாது—உடனே ஒப்பவேண்டும். இப்படியெல்லாம் கூறுகிறது, இந்துமதம்.

'எந்தப் பெண்ணை வேண்டுமானாலும் ஆடவன் அடையலாம்' என்று கூறுகிறதே அந்தவசதி பிராம்மணர்களுக்கு மட்டும் தான் உண்டாம்! மனு கூறுகிறார்.

"எவனாவது ஒரு சூத்திரன், மேல் ஜாதிப் பெண் எவள் மீதாவது ஆசைப் பட்டானானால் அவனை சித்ரவதைசெய். அல்லது, அவன் சொத்துக்களை அபகரித்துக் கொண்டு ஊரைவிட்டுத் துரத்து"

மனு கூறுகிறார்! இது, இந்து மதத்துக்கான சட்டம்!! பிராம்மணன் எவளையும் கூடலாம். ஆனால் சூத்ரனுக்கு அந்த உரிமை கிடையாது!!

பெண் குலத்தை நாயினும் கேடாய் மதிக்கிறது, இந்து மதம்! அதே போல சூத்ரர்களையும் மதிக்கிறது மனு காட்டிய வழி!!

இதைத்தான், அம்பேத்கார் எடுத்துக் காட்டினார்.

ஆனால் வைதீகர்கள் சீறினர்! இத்தகைய இந்து மதம் புனிதமானதாம்!

தன்மனைவி உயிரோடிருக்கையில் ஆடவன் எத்தனை மனைவிகளை வேண்டுமானாலும் அடையலாம். ஆனால் தன் புருடன் உயிரோடிருக்கையில் வேறு புருடனை எந்தப் பெண்ணும் மணத்தல்கூடாது. அப்படி அவள் மணப்பது இ. பி. கோ 494 பிரிவுப்படி குற்றம்! விபசார வழக்கு அவள் மீது வீசப்படும்! ஏழு வருடம்வரை சிறைத்தண்டனை தரலாம்!

மனுச்சட்டப்படி வகுக்கப்பட்ட இந்துச் சட்டம் கூறுகிறது இதனை.

ஆணுக்கொரு நீதி! பெண்ணுக்கொரு நீதி!!

பெண் என்றால் கண் என்பர். பிரியம் வைப்பர். பட்டாடை, அணிமணி, அலங்காரம் அத்தனையும் செய்து மகிழ்விப்பர். ஆனால் அவள் தன்னைப்போல வாழ்தல் தகாதாம்! தவறாம்!! ஆகாதாம்! அக்கிரமமாம்!!! 'சீச்சி! பொட்டச்சிக்கு இவ்வளவு ராங்கியா? நான் ஆம்பிளே! தெரியுமா?'' இப்படி, கர்வத்துடன், கர்ஜிக்கின்றனர்.

இந்தக் கருத்துக் கபோதிகளைக் கண்டு கலங்கியிருக்கிறது, இந்த சர்க்கார்!

''வைதீகத்தின் வல்லமை பார்த்தீரோ! பெரியப் பெரிய தலைவாளெல்லாம் ஆதரிச்சா. நேரு கூடப் பேசினார், நான் ராஜினுமா செய்துடுவேன்னு. மந்திரிகளெல்லாம் கதறினா. என்ன ஆச்சுண்ணேன்! பலிச்சுதோ ஓய்! பலிக்குமோன்னே!''

இப்படி, அக்ராகாரம் மகிழும். காந்தியார் இறந்தபோது வழங்கிய கல்கண்டைவிட அதிகம் வழங்கியிருக்கும்! ஆனந்தகீதம் பாடியிருக்கும்!!

"உண்மைதான். வைதீகம் மிகக் கொடுமையானது. பாருங்களேன்! சனாதனத் திமிரை. சாய்த்தன்றோ விட்டது — தனது தந்திரமூலம்" என்று, வைதீகத்தின மீது சீறுவோரும் உண்டு! 'ஒழித்தே தீருவோம், என்று கர்ஜிக்கவும் தோன்றும்!!

சனாதனக் கொடுமை, வைதீகத் தாண்டவம் பற்றி தினசரி அனுபவிக்கும் நம் போன்றார் இதயம் எரிமலையாகியே தீரும்!

ஆனால், வைதீகத்தின் பலம்எது? பீரங்கியும் குண்டுமா தூக்கி வந்துவிடும்!

அதிலும், அதையெதிர்த்து நின்றோர், ஒரு அரசியலை தாங்கிநடத்துபவர்—செல்வாக்கு மிக்கவர், ஆசிய ஜோதி!

ஆனால் அவரேபணிந்திருக்கிறார்—சாதாரண திருத்த மசோதா அதை நிறைவேற்றவில்லை! கைவிட்டிருக்கிறார்!!

இது, வைதீகத்துக்குள்ள செல்வாக்கையல்ல காட்டுவது.

அதை எதிர்த்து நிற்க முடியாத இவர்களின் கோழைத்தனத்தையே வெளிப்படுத்துகிறது.

* பாசிச பேயாட்சிக்கு ஓர் கொடுவாள்!
* ஜனநாயக ஐக்கிய அணிக்கு ஓர் பாசறை!!
* சமதர்ம ராஜ்பாட்டைக்கு ஒரு விடி வெள்ளி!!!
* சமுதாய அழுக்கெரிக்க ஒரு சுடர் நெருப்பு!
* யுத்த வெறி ஒழிப்புக்கு ஓர் உலைக்களம்!!

"புரட்சி"

முற்போக்கு வார இதழ்

ஆசிரியர்: மாஜினி

14—10—51ம் தேதி முதல் மீண்டும் முரசொலிக்கிறது.

தனிப் பிரதி விலை அணா 2

ஏஜன்ஸி விவரங்களுக்கு எழுதவும்:—

265, மேலமாசி வீதி, மதுரை.

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. மைதானத்தில் நவம்பர்

இரண்டாவது வாரத்தில் நடைபெறும்

இயக்கத்தின் முன்னணி வீரர்கள் இந்த வாரத்தில் பொதுச் செயலாளரை சென்னையில் சந்தித்துப் பேசிச் சென்றுள்ளனர்.

★

தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., ஈ. வே. கி. சம்பத், கி. மனோகரன் ஆகியோர் மாநாட்டு அலுவல்களைக் கவனிக்க சென்னைக்கு வந்துள்ளனர்.

★

புதிய நாடகங்கள் ஒத்திகை காஞ்சீபுரத்திலேயே நடைபெற ஏற்பாடாகி வருகிறது.

★

தி. மு கழகத்தின் சார்பில் Board of Information of Puplicity என்ற அமைப்பின்மூலம், மாநாடு குறித்தும், இயக்கத்தைப் பற்றியும், ஆங்கில வெளியீடுகள் வெளியிட்டு, அகில உலகமும் அறியச் செய்ய முயற்சி தொடங்கப் பட்டுள்ளது.

★

ஓவியக் கண்காட்சிக்கான சித்திரக் காரர்கள் காஞ்சி ராமச்சந்திரன், தருமபுரி பழனிசாமி, அரி, கடையநல்லூர் சண்முகம் ஆகியோர் காஞ்சியிலேயே தங்கி பணியாற்றி வருகிறார்கள் ஓவியப் பகுதியில் இப்பொழுது விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளையும் அவற்றைக் கண்டவர்களின் படங்களும், வானுலக விந்தைகளை விளக்கும் சித்திரங்களும் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

விளம்பரக்குழு.

அனுப்புங்கள் —

கிளைக் கழகங்களின் பெயர்களை பொறித்த 3'X2' அளவுள்ள கொடிகளை உடனே அனுப்புங்கள்.

இரண்டாண்டு காலத்தில் வெளிவந்துள்ள இயக்க சார்புடைய நூல்களை அனுப்புங்கள்.

—காஞ்சி தலைமை நிலையத்திற்கு

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,